# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதளமுகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு.மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்.06/மா/2025,
நாள் 09.01.2025

திரு இரா.கிஸ்டி,
சென்னை. ............... முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் 10,
பெரு நகர சென்னை மாநகராட்சி. ................. எதிர் மனுதாரர்

சென்னை, கோடம்பாக்கம், வரதப்பன் தெரு, கதவு எண்.1, என்கிற முகவரியில் வசிக்கும் திரு.இரா. கிஸ்டி என்பவரின் 19.11..2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.11.2024 அன்று பெறப்பட்டு, 06/மா/2025, என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை, கோடம்பாக்கம், வரதப்பன் தெரு, கதவு எண்.1, என்கிற முகவரியில் வசிக்கும் திரு.இரா.கிஸ்டி, என்பவர் 19.11..2024 நாளிட்ட தனது மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்.

“மேற்கண்ட முகவரியில் வசிக்கும் தான் ஒரு சமூக ஆர்வலர் என்றும், சென்னை, கே.கே,.நகர், அழகிரி சாலை, கதவு எண். 602 என்ற முகவரியில் சில ஆண்டுகளுக்கு முன்பு பழைய கட்டிடத்தை இடித்து 3 தளத்தில் புதிய கட்டிடம் கட்டப்பட்டது என்றும், இக்கட்டிடத்தைச் சுற்றி இருபுற சாலைகளில் தரைதளத்தில் வணிக வளாகங்களும், மேல் தளத்தில் தமிழ்நாடு அரசு சார் பதிவாளர் அலுவலகமும் செயல்படுவதாகவும், இக்கட்டிடத்தைச் சுற்றி மழைநீர் கால்வாயை ஆக்கிரமித்து சுமார் 5 அடி உயரம், 10 அடி அகலம், 200 அடி நீளத்தில் Steps and Ramp அமைத்துள்ளதால், பாதசாரிகள் தடுக்கி விழுகிறார்கள் எனவும், தண்ணீர் சீராக செல்ல முடியாமல் உள்ளது என்றும், பார்க்கிங் வசதி இல்லாமல் உள்ளதால், வாகனங்களை தெருவில் நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாகவும், CMDAயில் பெறப்பட்ட வரைபடத்தின்படி

கட்டப்படவில்லையென்றும் எனவே இக்கட்டிடத்தின் மீது உரிய சட்டவிதிகளின்படி நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

2. மனுதாரர் இம்முறை மன்றத்திற்கு படிவம் 1–ல் இணைத்துள்ள, மாவட்ட ஆட்சியர் உட்பட, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஆகியோருக்கு முகவரியிட்ட 25.02.2019 நாளிட்ட மனுவில், குறிப்பிட்டுள்ள கட்டிடம் சில ஆண்டுகளுக்கு முன்பாக இடிக்கப்பட்டு புதிதாக கட்டப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார். எனவே இதன் மூலம் மனுதாரர் குறிப்பிட்ட கட்டிடம் **2019–ஆம் ஆண்டுக்கு முன்பு கட்டப்பட்டது என்று அறியமுடிகிறது.**

3. மேற்கண்ட மனுதாரரின் புகார் ஐந்து ஆண்டுகளுக்கு மேலான பொருட்பாடாக உள்ளது. ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட புகார்கள் குறித்து தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் 2014, பிரிவு 10(3)இல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

10 (3) The Ombudsman shall not enquire into matters relating to-

(a) xxxx
(b) xxxx
(c) any complaint filed after the expiry of five years from the date on which the occurrence is said to have taken place

4. எனவே, மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள புகார் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக உள்ளதால், மேற்கண்ட விதியின்படி இம்முறைமன்ற நடுவத்தால் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 09–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்,

1) திரு இரா. கிஸ்டி.
எண். 1, வரதப்பன் தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை 600 024.

2) மண்டலம் அலுவலர்,
மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி,
64, என்.எஸ்.கே. சாலை
கோடம்பாக்கம்,
சென்னை 600 024.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரிகள்

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).

21/1/25

21/1/25

4/6

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை 600 032